இன்றைய செய்தி நாளைய வரலாறு




முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 26-12-2024

# தோழர் நல்லகண்ணு நலமோடு வாழ்க!



**ஏழைகளின் இதயம் நீ!**
**இருள்காலை உதயம்நீ!**
**தோழர்களின் துணைவன் நீ!**
**தொண்டறத்தின் சிகரம் நீ!**
**எளியோரின் இலக்கியம்நீ!**
**எளிமைக்கும் இலக்கணம்நீ!**
**தூய்மையின் இருப்பிடம் நீ!**
**தோற்காத இலட்சியம்நீ!**
**தனிவுடைமை சிதைப்பவன்நீ!**
**தலைநிமிர்ந்த இமயம்நீ!**

– என்று எழுதினார் பாவலர் பல்லவன். பொதுநலம் ஒன்றையே குறிக்கோளாகக் கொண்டு பொதுவுக்காய் வாழும் பொதுவுடைமைத் தலைவர் தோழர் நல்லகண்ணு நூற்றாண்டு விழா காண்கிறார் இன்று. (டிசம்பர் 26)

இந்தியாவின் ஆட்சியைக் கவிழ்த்து கம்யூனிஸ்ட் அரசாங்கத்தை நிறுவ முயற்சிப்பதாக 1948 காலக்கட்டத்தில் பல்வேறு ஊர்களில் கம்யூனிஸ்ட் தோழர்கள் கைது செய்யப்பட்டார்கள். பலரும் தலைமறைவு ஆனார்கள். பலரும் கைது செய்யப்பட்டார்கள். கைது செய்யப்பட்ட தோழர்களில் ஒருவர் நல்லகண்ணு.

இரண்டு ஆண்டு காலம் தலைமறைவில் இருந்த தோழர் நல்லகண்ணு 1949 டிசம்பர் 20 அன்று கைது செய்யப்பட்டார். எந்தப் பண்ணையார்களை எதிர்த்து நீதி கேட்டாரோ அந்தப் பண்ணையார்கள் முன்பாகவே அடித்து சித்திரவதை செய்யப்பட்டார். கையும் காலும் கட்டப்பட்டு முச்சந்தியில் போட்டு அடித்தார்கள். அவரது மீசையை சிகரெட் நெருப்பால் சுட்டார்கள். மலை உச்சிக்கு தூக்கிச் சென்று, ‘இதில் இருந்து தான் பலரையும் தூக்கிப் போட்டேன், இப்போது உன்னையும் போடப் போகிறேன்’ என்றார் போலீஸ்காரர். அப்போதும் வாயைத் திறக்காமல் நெஞ்சுரத்தோடு இருந்தவர்தான் நல்லகண்ணு.

**“கம்யூனிஸ்ட்டுகளான எங்களைப் போன்றோர், விடுதலை இந்தியாவில் வறுமை ஒழிக்கப்பட வேண்டுமென்று விரும்பினோம். அந்நிய அதிகாரிகளுக்கு அடுத்தபடியாக மக்களை அடக்கி வந்த ஜமீன்தார்கள், மிராசுதார்களிடமிருந்து கிராமப்புற ஏழை எளிய மக்களுக்கு விடுதலை கிடைக்க வேண்டுமென்று கருதினோம். ஜமீன் தார்களையும் மிராசுதார்களையும் மடாதிபதிகளையும் எதிர்த்து உழவர்களை ஒன்று திரட்டினோம். அணு அணுவாய்ப் போராடி உரிமைகளைப் பெற்றோம் என்பதை விட உரிமைகளைப் பறித்தோம்” என்று சொன்னார் நல்லகண்ணு.**

ஏழு ஆண்டுகள் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டார். சிறையில் இருந்து வெளியில் வந்த பிறகும், முன்னிலும் உரம் பெற்று உழைத்தார். சுதந்திர இந்தியாவில் பொதுவுடைமைத் தத்துவம் தமிழ்நாட்டில் வளர உழைத்ததில் தோழர் நல்லகண்ணுவின் பங்கு பெரும்பங்கு ஆகும். வரலாற்றில் தனிமனிதர்களின் பங்கை ஒப்புக் கொண்ட தத்துவம்தான் மார்க்சியம். அதன்படி வரலாற்றில் பெரும்பங்கு தோழருக்கும் உண்டு.

இந்தியாவின் புகழ்பெற்ற பத்திரிக்கையாளர் சாய்நாத், தோழர் நல்லகண்ணுவிடம் சில ஆண்டுகளுக்கு முன் ஒரு கேள்வியைக் கேட்டார். “உங்கள் வாழ்க்கையில் சோர்வே ஏற்படவில்லையா?” என்று!

“நாங்கள் எச்சரிக்கைகள், மிரட்டல்கள் தாண்டி எழுந்து நின்றோம். அதனால்தான் நாங்கள் இன்றும் இங்கிருக்கிறோம்” என்றார் நல்லகண்ணு.

இப்போது தோழர் நல்லகண்ணு, பொதுவுடைமைத் தத்துவத்தின் அடையாளமாக நம் முன் காட்சியளிக்கிறார். பொதுவுடமை என்பது எது என்பதன் அடையாளமும் அவர் தான். மார்க்ஸ் – அம்பேத்கர் – பெரியார் ஆகிய மூன்றின் கூட்டுத் தத்துவமாக தமிழ்நாட்டில் பொதுவுடைமைச் சிந்தையை வளர்த்த – வார்ப்பித்த ஆளுமைகளில் ஒருவர்தான் தோழர் நல்லகண்ணு. சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் நீட்சியாக, மாவீரர் ஜீவாவின் தொடர்ச்சியாக இருப்பவர் தோழர் நல்லகண்ணு.

அன்றைய காலனியாதிக்க காலம் முதல் – இன்றைய மதவாத எதேச்சதிகார காலம் வரை எதை – எப்போது மிகச் சரியாக எதிர்கொள்ள வேண்டும் என்பதைக் கணித்து அதை, அப்போதே எதிர்த்து அரசியல் களம் அமைப்பதில் நேரிய சிந்தனை கொண்ட நேர்மையாளராக வலம் வந்தவர் அய்யா நல்லகண்ணு அவர்கள்.

பொதுவுடமை – சமூகநீதி – சாதி ஒழிப்பு – மதவாத எதிர்ப்பு – தேசிய இனப்பிரச்சினை – தமிழ்க்குச் சிறப்பு – தமிழின மேம்பாடு – ஆகிய அனைத்துக்கும் சரிசமமான முக்கியத்துவம் கொடுத்து உழைத்தவர் தோழர் நல்லகண்ணு. உழைக்க வழிகாட்டியவரும் அவரே!

“சுதந்திரமும் சோசலிசமும் பிரிக்க முடியாதவை. சுதந்திரத்திலிருந்து சோசலிசத்தையோ, சோசலிசத்திலிருந்து சுதந்திரத்தையோ பிரித்தால் எஞ்சுவது சூனியம்தான். வெற்றி என்பது ஓர் இயக்கத்துக்கு, இலட்சியத்துக்கு, கட்சிக்கு இறுதி நிகழ்ச்சியல்ல. முந்திய தலைமுறை விட்ட இடத்திலிருந்து புதிய தலைமுறை தொடர்ந்து இயங்க வேண்டும். வேலைத் திட்டம் என்பது பசி. வெற்றி என்பது அதற்குக் கிடைக்கும் உணவு. உணவு கிடைத்துவிட்டது என்பதால் பசி நின்று விடாது. பசியும் உணவும் தொடர வேண்டும்” என்றவர் தோழர் நல்லகண்ணு.

**வாழ்க்கையில் இறுதி வெற்றி என்று எதுவுமில்லை. வாழ்க்கை முழுக்கவே போராடிக் கொண்டே இருக்க வேண்டும் என்று கற்பித்த தோழர் நல்லகண்ணு. 100 ஆண்டுகள் கடந்த பின்னும் போராடிக் கொண்டே இருக்கிறார். போராட்டம்தான் வாழ்க்கை என்பதை உணர்த்திக் கொண்டே இருக்கும் தோழர் நல்லகண்ணு அவர்களுக்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பே ‘தகை சால் தமிழர்’ விருது வழங்கிப் பாராட்டி இருக்கிறார் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்.**

**தலைதாளாத ‘தகை சால் தமிழர்’ தோழர் நல்லகண்ணு வாழ்க!**

## விராலிமலையில் துணை முதல்வர் பிறந்தநாள் விழா!

விராலிமலை, டிச. 26–

விராலிமலை மேற்கு ஒன்றிய கழகம் சார்பில் கொடும்பாளூரில் மாவட்ட கழகச் செயலாளர் கே.கே. செல்லபாண்டியன் முன்னிலையிலும், ஒன்றிய கழகச் செயலாளர் இளங்குமரன் தலைமையிலும், கொடும்பாளூர் ஊராட்சி மன்ற தலைவர் அ.ஆனந்தன் வரவேற்புரையிலும் நடைபெற்ற கழக இளைஞரணிச் செயலாளர், தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்தநாள் விழா பொதுக்கூட்டத்தில் கழக கொள்கை பரப்பு துணைச் செயலாளர் கரூர் முரளி இளம் சொற்பொழிவாளர்கள் தமிழினியன், மதுமிதா சிறப்புரையாற்றினர்.

இதில் த.சந்திரசேகர், பழனியப்பன், கே.ஆர்.என் போஸ், சு. சண்முகம், மு.பி.ம.சத்தியசீலன், டி.செல்வம், ஏ.பி.ஆர்.ராஜாங்கம், பாலமுருகன், கே.ஜி.எஸ்.சுகி, எம். ஆர்.அன்பழ கன், சிவா, ராஜா, இரா. மூக்கையா, என்.எஸ்.கே.நல்ல தம்பி, நா.சி.பழனிச்சாமி, பெ. கண்ணன், இரா.பாலசுப்பிரமணியன், என். வீராச்சாமி, சி.சி. செல்வம், செ.கோபால், தகவல் எழில் ராஜா உள்ளிட்ட கழக நிர்வாகிகள் திரளாக பங்கேற்றனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (25.12.2024) முகாம் அலுவலகத்தில், சென்னை மேற்கு மாவட்டப் பொருளாளர் அகஸ்டின் பாபு கிறிஸ்துமஸ் திருநாளையொட்டி தனது மகனுடன் சந்தித்து வாழ்த்துப் பெற்றார்.

### தியாகி இம்மானுவேல் சேகரனாரின் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவித்த

# முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம்!

### அமைச்சர் அன்பில் மகேஷ்பொய்யாமொழி – ஏ.கே.எஸ்.விஜயன் – டி.வேல்முருகன் எம்.எல்.ஏ. சிறப்புரை!

தென்காசி, டிச.26-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகம் சார்பில் தியாகி இம்மானுவேல் சேகனாரின் பிறந்த நாளை அரசு விழாவாக அறிவித்த கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக் கூட்டம் முப்புடாதி அம்மன் கோவில் அன்பு அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழக நிறுவனர் மற்றும் தலைவர் திருச்சி பொன். முருகேசன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி, தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன்,தமிழக வாழ்வுரிமை கட்சி தலைவர் டி.வேல்முருகன் எம்.எல்.ஏ.ஆகியோர் பங்கேற்று சிறப்புரையாற்றினர்.

அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழகம் சார்பில் தியாகி இம்மானுவேல் சேகரனாரின் பிறந்தநாளை அரசு விழாவாக அறிவித்த கழகத் தலைவர், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் பொதுக்கூட்டம் சங்கரன் கோவில் முப்புடாதி அம்மன் கோவில் முன்பு அகில இந்திய மறுமலர்ச்சி கழகம் நிறுவனர் மற்றும் தலைவர் திருச்சி பொன்.முருகேசன் தலைமையில் தென்காசி ஒருங்கிணைந்த மாவட்ட செயலாளர் இரா.கருப்பசாமி பாண்டியன் முன்னிலையில் நடைபெற்றது.

மாநில செய்தி தொடர்பாளர் வடிவேல் வரவேற்புரையாற்றினார்.

இந்நிகழ்வில் தமிழக வாழ்வுரிமைக் கட்சி தலைவர் டி.வேல்முருகன் எம்.எல்.ஏ. தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தென்காசி வடக்கு மாவட்டக் கழக செயலாளர் ஈ.ராஜா எம்.எல்.ஏ. ஆகியோர் உரையாற்றினர்.

நிகழ்வில் பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பங்கேற்று பேசியதாவது:-

சங்கரன்கோவில் எனக்கு மறக்க முடியாத ஊராகும். எனது தாத்தா அன்பில் தர்மலிங்கம் உடல்நிலை குறைவால் திருச்சியில் மருத்துவமனையில் இருந்தபோது இந்த சங்கரன்கோவிலில் முத்தமிழறிஞர் கலைஞர் மிகப்பெரிய பொதுக்கூட்டத்தில் கலந்து கொள்ள வருகை தந்த நிலையில் எனது தாத்தா அன்பில் தர்மலிங்கம் மறைந்து விட்டார் என்ற செய்தி கேட்டு கூட்டத்தை ரத்து செய்து விட்டு உடனடியாக திருச்சிக்கு வந்தவர் நமது முத்தமிழ் அறிஞர் கலைஞர். அதனால் சங்கரன்கோவில் எனக்கு எப்பொழுதுமே மறக்க முடியாத ஊராகும்.2021 ஆட்சி மாற்றத்தின் போது அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழக தலைவர் பொன் முருகேசன் என்னை சந்தித்து தியாகி இமானுவேல் சேகரனாருக்கு மணிமண்டபம் மற்றும் அவரது பிறந்த நாளை அரசு விழாவாக நடத்த வேண்டும் என கோரிக்கையை வைத்தார். நான் இந்த கோரிக்கையை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் மூலமாக தமிழக முதல்வரின் கவனத்திற்கு கொண்டு சென்றோம். இதனை பரிசீலனை செய்த முதலமைச்சர் அவர்கள் உடனடியாக மணிமண்டபம் அமைக்கவும் இம்மானுவேல் சேகரன் பிறந்த நாளை அரசு விழாவாகவும் அறிவித்தார்கள். அதற்கு முக்கிய காரணமாக இருந்த துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுக்கு இக்கூட்டத்தின் வாயிலாக நன்றியை தெரிவித்துக் கொள்கிறேன். அதற்கான பாராட்டு விழா தற்போது நடைபெற்று வருகின்றது:-

கடந்த ஞாயிற்றுக்கிழமை தி.மு.க.வின் தலைமைச் செயற்குழு கூட்டம் நடைபெற்றது. அப்பொழுது தி.மு.க.தலைவர் முதல்வர் அவர்கள் பேசுவதற்கு முன்னால் நான் இங்கே வர வேண்டிய சூழ்நிலை இருந்தது. இதனை முதல்வர் அவர்களின் கவனத்திற்கு கொண்டு சென்றேன். அதனை கனிவோடு கேட்டுக் கொண்ட முதல்வர் அவர்கள் என்ன நிகழ்ச்சி என்று தெரிந்தவுடன் என்னை உடனடியாக கூட்டத்தில் கலந்து கொள் என்று சொல்லி,விழா எடுத்த பொன் முருகேசன் அவர்களுக்கு மு.க.ஸ்டாலின் என்றும் துணை இருப்பார் என்று சொல் என்றார்கள். ஆதிதிராவிட மக்களுக்கு நான் என்றைக்கும் துணையிருப்பேன் என்று கூட்டத்தில் கலந்து கொள்ளும் மக்களிடம் தெரிவிக்கும்படியும் என்னை அனுப்பி வைத்தார். முதல்வர் அவர்கள் ரூ.1000 கோடி மதிப்பீட்டில் அயோத்திதாசர் பெயரில் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம்,ரூ. 200 கோடி மதிப்பீட்டில் ஆதிதிராவிடர் குடியிருப்பு மேம்பாட்டு திட்டம், ஆதிதிராவிட மக்கள் தொழில் செய்வதற்கு ரூ.160 கோடி மானியம் வழங்கியவர் நமது தமிழ்நாடு முதலமைச்சர்.தி.மு.க. ஆட்சியில் இருக்க காரணமான உங்களை சந்திக்க வந்துள்ளேன். இது வரலாற்றில் இடம்பெறும் விழாவாக அமைந்துள்ளது.

முதலமைச்சர் அவர்கள் என்றுமே ஆதிதிராவிட மக்களுக்கு பக்க பலமாக இருந்து வருகின்றார்கள். நாம் அனைவரும் ஜாதி பார்க்காமல் உள்ள இடம் பள்ளிக்கூடம் ஆகும். அந்தப் பள்ளி கல்வித்துறைக்கு தான் நான் அமைச்சராக உள்ளேன். தந்தை பெரியார் எப்பொழுதுமே தன்னைவிட மேலானவர் யாரும் கிடையாது, எனவும் தன்னைவிட கீழானவர் யாரும் கிடையாது எனவும்,ஆதிக்க சக்திகள் எது வந்தாலும் அதனை எதிர்க்க வேண்டும் என கூறியவர். அவர் வழியில் வந்தவர் தான் தியாகி இமானுவேல் சேகரனார் 1957 ம் ஆண்டு அவர் இறந்த போது அறிஞர் அண்ணா சட்டமன்றத்தில் அனைவரும் ஒன்றாக இருக்க வேண்டும் என்பதை உணர்த்தியவர் இமானுவேல் சேகரன் என்று புகழாரம் சூட்டினார்.இமானுவேல் சேகரனார் சமத்துவம்,சமூக நீதி என்ற கோட்பாட்டில் உறுதியாக இருந்தவர்.மேலும் அனைவரும் கல்வி கற்க வேண்டும் என்பதிலும் குலக்கல்வியை எதிர்ப்பதிலும் தீவிரமாக இருந்தவர். ஆதிக்க சக்தியாக எது வந்தாலும் அதை எதிர்க்க வேண்டும் என வலியுறுத்தியவர். கலப்புத் திருமணங்களை கொண்டாடியவர். ராமநாதபுரத்தில் எழுச்சி மாநாடு நடத்தி சமூக நீதியை காக்க வேண்டும், ஜாதி பாகுபாடுகளை காளைய வேண்டுமென வலியுறுத்தியவர். சமூக கொடுமைகளை யார் ஒருவர் எதிர்க்கிறாரோ அவர்தான் உண்மையான மாவீரன் என்று சொன்ன அண்ணல் அம்பேத்கர் வழியில் வந்தவர். தியாகி இம்மானுவேல் சேகரனார்.

ஜாதியை மட்டும் வைத்துக் கொண்டால் தேசியத்தை உருவாக்க முடியாது. ஒழுக்கத்தை உருவாக்க முடியாது என்று கூறியவர் அண்ணல் அம்பேத்கர்.ஆனால் ஒன்றிய உள்துறை அமைச்சர் நாடாளு மன்றத்தில் அனைவரும் எதற்கெடுத்தாலும் அம்பேத்கர், அம்பேத்கர் என்று கூறி வருகின்றனர் நக்கலாக பேசியுள்ளார்.அவருக்கு நான் ஒன்றை சொல்லிக் கொள்கிறேன். அம்பேத்கர் பிளவர் இல்லை. பவர் என்று சொல்கிறேன்.இன்று இந்தியாவில் அனைத்து மாநிலங்களிலும் அம்பேத்கரை புகழ்ந்து வருகின்றனர்.ஆரிய கூட்டம் உள்ளே புகுந்து விடக்கூடாது என்பதில் இந்தியா கூட்டணியும், தமிழகத்தில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்களின் தலைமையிலான கூட்டணியும் உறுதியாக உள்ளது.

முதன்முதலில் சட்டமன்றத்தில் தமிழ்நாட்டில் தமிழர்களுக்கு வேலைவாய்ப்பில் முன்னுரிமை வழங்க வேண்டும் என பேசியவர் வேல்முருகன் எம்.எல்.ஏ. தற்போது ஆரிய கூட்டத்திற்கு நாம் பதிலடி கொடுக்க வேண்டும் என்று சொன்னால் அதற்கு சமூக நீதியும் சமத்துவமும் மிக முக்கியம். அதை தருவது கல்விதான். எல்லோரும் படிக்க வேண்டும் என்று நீதி கட்சி சொன்னது.தமிழ்நாட்டை பாது காக்க கூடிய திராவிட மாடல் தலைவரை நாம் பெற்றுள்ளோம்.

அதை கருத்தில் கொண்டு தமிழக முதல்வர் அவர்கள் கல்விக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகின்றார்.காலை உணவு திட்டம் இன்று தமிழ்நாட்டில் சுமார் 20 லட்சத்தி 73, 536 மாணவ, மாணவிகள் பயன்பெறுகின்றனர்.

உங்கள் வாழ்க்கை சிறக்கக்கூடிய இயக்கம் இது.

இனிவரும் காலங்களில் இமானுவேல் சேகரனார் பிறந்தநளை சிறப்பாக கொண்டாட வேண்டும் எனவும், கண்டிப்பாக அதில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கலந்து கொள்வார்கள். தியாகி இமானுவேல் சேகரனார் புகழை தொடர்ந்து கூறுவோம்.

இவ்வாறு அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி பேசினார்.

நிகழ்வில் தியாகி இமானுவேல் பேரவை ஒருங்கிணைப்பாளர் ஊர்காவலன், திருச்சிராப்பள்ளி வளர்ச்சி குழு தலைவர் திலீப் மற்றும் தி.மு.க. மாநில, மாவட்ட, ஒன்றிய, நகர பேரூர் கழக நிர்வாகிகள், அகில இந்திய மக்கள் மறுமலர்ச்சி கழக நிர்வாகிகள் உள்பட 500 க்கும் மேற்பட்ட ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டனர்.



சென்னை சர்வதேச விமான நிலையத்தில் 24.12.2024 அன்று தமிழ்நாடு அரசின் ஏற்பாட்டில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் “நான் முதல்வன்” திட்டத்தின் கீழ் ஜப்பான்,KYOTO பல்கலைக்கழகத்தில், சர்வதேச இன்டர்ன்ஷிப் திட்டத்தில் (International Internship Program) பங்கேற்ற மாணவியர்கள் தமிழ்நாடு வருகை புரிந்தனர்.